உ

# அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்,
# திருச்செந்தூர்

அனுப்புநர்
திரு.மு.கார்த்திக், பி.எஸ்.சி.,பி.எல்.,
இணை ஆணையர்/ செயல் அலுவலர்

பெறுநர்
ஆணையர்,
இந்துசமய அறநிலையத்துறை,
சென்னை-34

ந.க.எண். 3110 /2023/உ(5)/நாள்:13.11.2023

அய்யா,

பொருள்:- பத்திரிக்கைச் செய்தி - திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் தரிசன கட்டணம்(ரூ.1000/-) உயர்வு குறித்து அறிக்கை சமர்ப்பித்தல் - அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர் - தொடர்பாக.

பார்வை:- 1. தினமலர் செய்தி நாள்:13.11.2023
2. சென்னை, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மூ.மு.எண்.35997/2018/இசட்2/நாள் 19.07.2018
3. சென்னை, இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மூ.மு.எண்.130533/2023/இசட்3/நாள் 06.11.2023

------

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் இணை ஆணையர்/ செயல் அலுவலர் நிலையில் மற்றும் அரசால் நியமனம் செய்யப்பட்டுள்ள அறங்காவலர்குழு நிலையில் உள்ள முதுநிலை திருக்கோயிலாகும்.

இத்திருக்கோயிலின் தினசரி பக்தர்களின் எண்ணிக்கை அதிகளவில் இருந்து வருகிறது. இத்திருக்கோயிலில் ஏற்கனவே பக்தர்கள் தரிசனத்திற்கு இலவச தரிசனம், ரூ.100/- ஆகிய கட்டண தரிசன வரிசை மூலம் அனுமதிக்கப்பட்டு வந்தனர். என்ற விபரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

பார்வை 1ல் காணும் நாளிதழ் செய்தியில் தரிசனம் கட்டணம் திடீரென்று உயர்த்தப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு

| வ.எ | பொருள் |
|---|---|
| 1. | திருச்செந்தூர் கோவிலில் கந்தசஷ்டி முன்னிட்டு ரூ.100 ஆக இருந்த விஸ்வரூப தரிசன கட்டணம் ரூ.2000 |
| 2. | சாதாரண நாளில் ரூ.500 ஆகவும், விசேஷ நாளில் ரூ.2000 ஆகவும் இருந்த அபிஷேக தரிசன கட்டணம் ரூ.3000 |
| 3. | சிறப்பு தரிசன கட்டணம் ரூ.100 ஆக இருந்தது ரூ.1000 |
| 4. | 2022ல் நிர்ணயித்த சிறப்பு தரிசன கட்டணத்தை திடீரென இன்று உயர்த்தியதால் பக்தர்கள் அதிர்ச்சி |

Scanned with OKEN Scanner

வ.எண்.1ல் திருச்செந்தூர் கோவிலில் கந்தசஷ்டி திருவிழாவை முன்னிட்டு ரூ.100 ஆக இருந்த விஸ்வரூப தரிசன கட்டணம் ரூ.2000/-ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளதென வெளியிடப்பட்ட செய்தி தவறான செய்தியாகும். பார்வை 2ல் காணும் ஆணையர் உத்தரவில் 2018ம் ஆண்டிலிருந்தே கந்த சஷ்டி திருவிழாவின் போது கந்த சஷ்டி திருவிழா நாட்களில் மட்டும் விஸ்வரூப தரிசன கட்டணம் ரூ.500/-லிருந்து ரூ.2000/-ஆக உயர்வு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த உத்தரவின் அடிப்படையிலேயே தான் இன்று கந்தசஷ்டி திருவிழா முதலாம் திருநாள்(13.11.2023)ல் விஸ்வரூப தரிசன கட்டணம் ரூ.2000/-ஆக விற்பனை செய்யப்பட்டது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வ.எண்.2ல் திருச்செந்தூர் கோவிலில் கந்தசஷ்டி திருவிழாவை முன்னிட்டு சாதாரண நாளில் ரூ.500 ஆகவும், விசேஷ நாளில் ரூ.2000 ஆகவும் இருந்த அபிஷேக தரிசன கட்டணம் ரூ.3000/-ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளதென வெளியிடப்பட்ட செய்தி தவறான செய்தியாகும். பார்வை 2ல் காணும் ஆணையர் உத்தரவில் 2018ம் ஆண்டிலிருந்தே கந்த சஷ்டி திருவிழாவின் போது கந்த சஷ்டி திருவிழா நாட்களில் மட்டும் அபிஷேக தரிசன கட்டணம் ரூ.500/- லிருந்து ரூ.2000/-ஆக உயர்வு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அந்த உத்தரவின் அடிப்படையிலேயே தான் இன்று கந்தசஷ்டி திருவிழா முதலாம் திருநாள்(13.11.2023)ல் அபிஷேக தரிசன கட்டணம் ரூ.2000/-ஆக விற்பனை செய்யப்பட்டது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வ.எண்.3ல் திருச்செந்தூர் கோவிலில் கந்தசஷ்டி திருவிழாவை முன்னிட்டு சிறப்பு தரிசன கட்டணம் ரூ.100 ஆக இருந்தது ரூ.1000/-ஆக உயர்வு செய்யப்பட்டுள்ளதென வெளியிடப்பட்ட செய்தி தவறான செய்தியாகும். பார்வை 3ல் காணும் காணும் ஆணையர் உத்தரவில் தற்போது நடைமுறையில் உள்ள 100/- கட்டண தரிசன வரிசையில் செல்லும் பக்தர்களுக்கு எவ்வித இடையூறுமின்றி 2023ம் ஆண்டு கந்தசஷ்டி திருவிழாவிற்கு மட்டும் விரைவு தரிசன கட்டணச்சீட்டாக 12.11.2023 முதல் 19.11.2023 வரையிலான எட்டு தினங்களுக்கு மட்டும் நபர் ஒன்றுக்கு ரூ.1000/- நிர்ணயம் செய்து அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையிலேயே தான் இன்று கந்தசஷ்டி திருவிழா முதலாம் திருநாள்(13.11.2023)ல் 100/- கட்டண தரிசன வரிசையில் செல்லும் பக்தர்களுக்கு எவ்வித இடையூறுமின்றி விரைவு தரசனக் கட்டணம் ரூ.1000/-க்கு தனி தரிசன வரிசையில் தான் பக்தர்களை அனுமதிக்கப்பட்டது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

Scanned with OKEN Scanner

வ.எண்.4ல் 2022ல் நிர்ணயித்த சிறப்பு தரிசன கட்டணத்தை திடீரென இன்று உயர்த்தியதால் பக்தர்கள் அதிர்ச்சி என வெளியிடப்பட்ட செய்தியும் உண்மைக்கு புறம்பான செய்தியாகும். திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் எந்த விதமான கட்டணத்தை உயர்த்தவும் இல்லை மற்றும் இரத்து செய்யவும் இல்லை. பார்வை 3ல் காணும் உத்தரவின் அடிப்படையிலேயே இன்று கந்தசஷ்டி திருவிழா முதலாம் திருநாள்(13.11.2023)ல் 100/- கட்டண தரிசன வரிசையில் செல்லும் பக்தர்களுக்கு எவ்வித இடையூறுமின்றி விரைவு தரிசனக் கட்டணம் ரூ.1000/-க்கு தனி தரிசன வரிசையில் பக்தர்களை அனுமதிக்கப்பட்டது என்ற விபரம் பணிந்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

13/11/2023

இணை ஆணையர்/ செயல் அலுவலர்,

Scanned with OKEN Scanner